பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 11 2024 6 45
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1. இந்தியா – கயானா இடையே சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட பத்து துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் பிரதமர் திரு நரேந்தி.ரமோடி முன்னிலையில் கையெழுத்தானது.
2. தேசிய பொது ஒலிபரப்பு நிறுவனமான பிரசார்பாரதி 'வேவ்ஸ்' என்ற ஓ டி டி தளத்தை தொடங்கியுள்ளது.
3. தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் கொலை செய்யப்பட்ட அரசு ஆசிரியை குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவியை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், அரசு நிர்வாகத்திலும் மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கிரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

இந்தியா – கயானா இடையே சுகாதாரம், ஹைட்ரோ கார்பன், வேளாண்மை உள்ளிட்ட பத்து துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

ஜார்ஜ்டவுணில் நேற்று மாலை பிரதமர் திரு நரேந்திரமோடி, கயானா அதிபர் திரு முகமது இர்பான் அலி இடையே நடைபெற்ற பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களுக்குப் பின் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மருந்து பொருட்கள், மக்கள் மருந்தகம், கலாச்சார பரிமாற்றம், பிரஸார்பாரதி – கயானாவின் தேசிய தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, குஜராத் தேசிய பாதுகாப்பு

பல்கலைக்கழகம் - கயானா தேசிய பாதுகாப்பு நிறுவனம் இடையேயான ஒத்துழைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பின்னர் இரு தலைவர்களும் கூட்டறிக்கை வெளியிட்டனர்.

அனைத்து விவகாரங்களுக்கும் பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வுகாண வேண்டுமென்று இந்தியாவும் - கயானாவும் ஒப்புக் கொண்டுள்ளதாக கூட்டறிக்கையில் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைப்புகளில் நிறுவனங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இரு நாடுகளும் வலியுறுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், கயானாவுக்கு கடந்த ஆண்டு இரண்டு டார்னியர் ரக விமானங்களை இந்தியா வழங்கியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கயானாவில் மக்கள் மருந்தகங்களை அமைப்பதற்கான பணிகளில் இந்தியா ஈடுபட உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கயானா அதிபர் திரு முகமது இர்பான் அலி, உலக நாடுகளின் வளர்ச்சிக்கு திரு நரேந்திரமோடி பெரும் பங்காற்றி வருவதாக அந்த கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு நரேந்திரமோடியின் கயானா பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கம் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலும்பெறும் என்று அவர் கூறியுள்ளார்.

பின்னர் தாயின் பெயரில் ஒரு மரக்கன்று திட்டத்தின் கீழ் ஜார்ஜ்டவுனில் திரு நரேந்திரமோடியும், திரு முகமது இர்பான் அலியும் மரக்கன்றை நட்டனர்.

கயானா நாடாளுமன்றத்தில் திரு நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

பின்னர் அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

ஜார்ஜ்டவுனில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் கயானாவின் உயரிய விருது திரு நரேந்திரமோடிக்கு வழங்கப்படவுள்ளது.

[]<<<>>>[]

தேசிய பொது ஒலிபரப்பு நிறுவனமான பிரசார்பாரதி ‘வேவ்ஸ்’ என்ற ஓ டி டி தளத்தை தொடங்கியுள்ளது.

கோவாவில் நேற்று தொடங்கிய இந்திய சர்வதேச திரைப்பட விழா நிகழ்ச்சியில் இந்த தளம் அறிமுகம் செய்யப்பட்டது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரஸார் பாரதி தலைவர் திரு நவ்நீத் குமார் ஷெகல், மற்ற ஓ டி டி தளங்களைவிட இந்த வேவ்ஸ் தளம் தனித்துவமிக்கது என்றும், குடும்பம் சார்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறும் என்றும் கூறியுள்ளார்.

வானொலி ஒலிபரப்பு, 65 தொலைக்காட்சி அலைவரிசைகள், பல்வேறு செயலிகள் உள்ளிட்டவை இந்த வேவ்ஸ் ஓ டி டி தளத்தில் இடம்பெற்றுள்ளதாக பிரஸார் பாரதி தலைவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் கொலை செய்யப்பட்ட அரசு ஆசிரியை குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு விரைவில் சட்டப்படி தண்டனை பெற்றுத்தரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கொலை சம்பவம் நிகழ்ந்த பள்ளிக்கு நேரில் சென்று சம்பவம் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பள்ளிக்கு இந்த வாரம் முழுவதும் விடுமுறை அளிக்கப்படுவதாகவும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே அச்சத்தை போக்கும் வகையில் அவர்களுக்கு கவுன்சிலிங் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - அன்பில் மகேஷ் ) -48--- செகண்ட்.*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் ஆசிரியை கொல்லப்பட்டது உள்ளிட்ட வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதையடுத்து அரசு நிர்வாகத்திலும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் முதலமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

உயிரிழந்த ஆசிரியை குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் திரு முருகன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தி.ல் கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ராமநாதபுரத்தில் நேற்று அதிகனமழை பெய்துள்ளது.

இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கார்த்தி.கேயன் ) -30--- செகண்ட்*

தூத்துக்குடி மாவட்டத்திலும் நேற்று இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.,

இதன் காரணமாக ஆற்றில் பொதுமக்கள் இறங்க வேண்டாம் என ஆட்சியர் திரு கார்த்திகேயன் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

திருவாரூர் மாவட்டத்தில் மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பெருமழை பெய்தாலும் பெரும் பாதிப்பு ஏற்படாது என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

அம்மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

பருவமழை தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பருவமழையை எதிர்கொள்ள திருவாரூர் மாவட்டம் தயார் நிலையில் உள்ளதாகக் கூறினார்.

பயிர்க்காப்பீடு செய்வதற்கு இம்மாதம் 30-ஆம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் அதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு திரு டி ஆர் பி ராஜா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

லெபனானில் போர் நிறுத்தம் குறித்து அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் திரு நபி பெர்ரி-யுடன் அமெரிக்க தூதர் திரு அமோஸ் **Hochstein** பேச்சு நடத்தினார்.

[]<<<>>>[]

லாவோஸ் தலைநகர் வியான்டானில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், லாவோஸ் மற்றும் மலேசியா நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

[]<<<>>>[]

டாக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தியா – பங்ளாதேஷ் வெளியுறவு அமைச்சக அலுவலக ஆலோசனைக் கூட்டத்தில் வெளியறவுத்துறை செயலாளர் பங்கேற்கிறார்.

[]<<<>>>[]

துபாயில் நடைபெற்று வரும் இயற்கை வேளாண் பொருட்கள் கண்காட்சியில் 18 இந்திய நிறுவனங்கள் தங்கள் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளன.

[]<<<>>>[]

செயற்கை நுண்ணறிவை பொறுப்புடனும், உரிய வகையிலும் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இம்மாதம் 27-ஆம் தேதி நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் வருகை தரவுள்ளதை அடுத்து அதற்கான முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழாவில் இரண்டாயிரத்து 833 பயனாளிகளுக்கு 25 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு நாசர் வழங்கினார்.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திருமதி சாந்தி நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே லாரியும், இருசக்கர வாகனமும் மோதி நேரிட்ட விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுறுவலை தடுக்க செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடலோரப் பகுதியில் நேற்று பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சென்னை புறநகர் பகுதியான புழலில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த ஆறு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

**[]<<<>>>[]**

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கிரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 12-21, 21-19, 21-18 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

கேலோ இண்டியா இளையோர் விளையாட்டுப் போட்டியை அடுத்த ஆண்டு பீகாரில் நடத்த மத்திய விளையாட்டு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

பீகார் மாநிலம் ராஜ்கிரில் ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஸ் போட்டி வெற்றிகரமாக நடைபெற்றதை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

***End of News***